[1981 மார்ச் 23

திரு. சு. பாலன் : ஆழமான வடிகால்களில் பொருத்தப் பட்டுள்ள இரும்பு மூடிகளை திருடியதன் காரணமாக கடந்த வாரம் கூட ஒருவர் அதில் விழுந்து இறந்ததாக செய்தி வந்திருக் கிறது. ஆகவே இப்படிப்பட்ட பாதகச் செயல்களைச் செய்பவர்கள் கொலையாளிகளாக கருதப்பட்டு அவர்கள் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதோடு இந்த இரும்பு மூடிகளை அகற்றுபவர்களைக் கண்டுபிடிப்பவர் களுக்கு அரசாங்கம் ஏதாவது பரிசு கொடுத்தால் இத்தகைய திருடுகள் நிறுத்தப்படும். ஆகவே அதற்காக அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பி னர்களைக் போன்றவர்கள் இதில் ஒத்துழைப்புத் தந்தால் அவர்களும் அந்தப் பரிசைப் பெறலாம்.

உப்பிலியாபுரம் தொகுதியில் அணைக்கட்டுத் திட்டங்கள்.

*வினா எண் 446—திரு. வெ. அரங்கராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதியில் ''காணப்பாடி அணைக்கட்டு திட்டம்'' அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மதிப்பீடு எவ்வளவு?

(இ) எப்போது பணி துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) திருச்சிராப் பள்ளி மாவட்டம், உப்பிலியாபுரம் தொகுதியில் காணப்பாடி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்ட ஆய்வு மேற்கொள்ளப் பட்டு கீழ்ப்பகுதி ஆயக்கட்டுக்காரர்களின் எதிர்ப்பின் காரண மாக கைவிடப்பட்டது என சிறுபாசனத் தலைமைப்பொறியா ளர் தெரிவித்துள்ளார்.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. வெ. அரங்கராசன் : கீழ்ப்பகுதியில் இருக்கிற மக்களு டைய முறையீடுகள் காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அங்கே ஆதிவாசிகள் நூற்றுக்கணக்கானவர்கள் குடியிருக்கிறார்கள். அங்கே பச்சைமலையிலிருந்து தண்ணீர் அதிகமாக வருவதால் அந்தத்

1981 மார்ச் 23]

தண்ணீரை அவர்கள் ஆற்றுக்கு கேட்டுக்கொண்டிருந்தாலும் இந்த அணை கட்டுவதன் மூலம் ஆயிரக்கணக்கான கிணறுகளுக்கு நீர்ப்பிடிப்பு உருவாவதற்கான வசதிவாய்ப்புகள் இருப்பதால் இந்த காணப்பாடி அணைக்கட்டு திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : உப்பிலியாபுரம் தொகுதியில் காணப்பாடி என்ற இடத்தில் ரூ. 75,000 செலவில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் தீட்டப்பட்டு அதை நிறைவேற்றுவதற்காக ஆய்வு செய்யப்பட்டபோது கீழே அந்த ஆற்று நீரைப் பயன்படுத்தும் விவசாயிகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததால் அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. திரும்பவும் வேண்டுகோள் வந்ததன் காரணமாக காணப்பாடி ஆற்றின் குறுக்கே கிருஷ்ணாபுரம் எனும் இடத்தில் ஒரு குட்டை கட்டலாம் என்று ஆய்வு செய்தபோது அப்போதும் விவசாயிகள் எதிர்ப்பு அதிகமாக இருந்ததன் காரணமாக அந்தத் திட்டமும் கைவிடப்பட்டிருக்கிறது. நிலைமை இப்படி இருக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வேளை அங்குள்ள விவசாயிகளிடமும் பயன் அடையக் கூடிய மக்களிடமும் கலந்து பேசி ஒரு சமாதானமான சூழ்நிலையை உருவாக்குவார்களேயானால் நிச்சயமாக இந்த அரசாங்கம் அதைப்பற்றி திரும்பவும் பரிசீலனை செய்யும்.

திரு. வெ. அரங்கராசன் : கலந்து பேசி நடவடிக்கை எடுத்தால் மறுபரிசீலனை செய்வதாகக் கூறியிருக்கிறார்கள். அவசியம் மக்களிடம் கலந்து பேசினால் இந்த ஆண்டுத் திட்டத்திலேயே இதை எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : இதை ஆண்டுத் திட்டம் என்று யோசித்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை. ஒட்டு மொத்தமாக இப்படிப்பட்ட பாசனத் திட்டங்களுக்கு போதுமான அளவிற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கியிருக்கிறது. சூழ்நிலை சுமுகமாக இருக்குமானால் உடனடியாக திட்டத்தை எடுத்துக்கொள்வதில் அரசாங்கத்திற்கு ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : உப்பிலியாபுரம் தொகுதி காணப்பாடி அணைக்கட்டுத் திட்டம் சம்பந்தமாக பொது மக்களின் ஆட்சேபணை இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனால் அந்த வேலை தடைபடுகிறது என்றும் சொன்னார்கள். இதேபோன்று என்னுடைய பழனி தொகுதியில் குதிரையாறு திட்டத்திற்கு யாரும் எதிர்ப்பு சொல்லாமல் கட்டுங்கள், கட்டுங்கள் என்று ....